

# மண்ணைப் பொன்னாக்கிய மாமனிதர்

டாக்டர். சுல்தான் இஸ்மாயில்




டாக்டர். சுல்தான் இஸ்மாயில் அவர்களின் தொழில் பயணத்தைப் பற்றி கேட்கும் போது, நம் நினைவில் வருவது 'தற்செயலாக நடந்த இனிய நிகழ்வுகள் கொண்ட வாழ்க்கை பயணம்' என்பது தான். வந்த வாய்ப்புகள் அனைத்தையும் அப்படியே அபகரித்து அவரின் நிபுணத்துவத்தைக் கொண்டு அவர் நமக்கும், இந்த உலகத்துக்கும் அளித்துள்ள மண் உயிரியல், மண்புழு உரமாக்கல் பற்றிய விழிப்புணர்வு மிகவும் விலை மதிப்பற்றதாகும். டாக்டர். இஸ்மாயில் மண்புழு பற்றிய ஆராய்ச்சியில் ஒரு நிபுணராவார். இதில் முன்னோடியான அவர், ஏறத்தாழ 40 வருடமாக இந்த துறையில் இருக்கிறார். டாக்டர். சுல்தான் இஸ்மாயில் ஒரு சுற்று சூழல் ஆய்வாளரும் கூட. பல்லுயிர்கள், காட்டில் தான் என்று இல்லை, நம் வீட்டுத் தோட்டத்திலும் ஆரம்பிக்கலாம் என்று நம்புகிறார்.

1951ல் பாண்டிச்சேரியில் ஒரு வழக்குரைஞருக்குப் பிறந்த டாக்டர். இஸ்மாயில், பள்ளிப் படிப்பை St. Joseph of Clunyயில் படித்தார். அவரின் சிறு வயதிலேயே அவர் தந்தை இறந்து விட, அவரின் குடும்பம் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியது. கல்வி மூலம் நல்ல நிலைமை அடைய வேண்டும் என்பதில் டாக்டர். இஸ்மாயில் உறுதியாக இருந்தார். 1968ல், அறிவியல் படிக்க சென்னை நியூ கல்லூரி வந்த அவர், 1969ல் பி.யூ.சி முடித்தார்.

தொழில் சார்ந்த படிப்புக்கு அவர் தேர்வு செய்யப்பட்டார் எனினும், அவர் பெயர் பட்டியலில் இல்லாததால், வேதியியலில் பட்டப்படிப்பு படிக்க முடிவு செய்தார். ஆனால், ஒரு சிறந்த விலங்கியல் பேராசிரியர் திரு. நந்தகுமார் அவர்களால், அவர் விலங்கியல் எடுத்து 1972ல் விலங்கியலில் பட்டம் பெற்றார் டாக்டர். இஸ்மாயில். இது 'தற்செயலாக நடந்த இனிய நிகழ்வு!!' அவரின் அதிர்ஷ்டம் அவர் இளங்கலை பட்டம் முடிக்கும் போது, நியூ கல்லூரி, முதுகலை படிப்பும் கொண்டு வர, தன் பேராசிரியரின் சிபாரிசு பேரில் முதுகலை படிப்பு சேர்ந்து 1974ல் முடித்தார். படிப்பு முடித்தவுடன் வேலை தேட ஆரம்பிக்கும் போது, அவர் படித்த கல்லூரியிலேயெ விலங்கியல் துறையில் செய்முறையாளராக தற்காலிக வேலை கிடைத்தது. அந்த வேலை நீட்டிக்கப்படும் என்று நம்பி சேர்ந்தார். அதிர்ஷ்டம் மறுபடியும் அவர் கதவைத் தட்டியது, யாரோ ஒருவர் ராஜினாமா செய்ய, அந்த வேலை அவருக்கு கிடைத்து 1975ல், விரிவுரையாளராக நிரந்தரப் பணியில் சேர்ந்தார். 1978ல், சென்னை பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்திய 'ஆசிரியர் முன்னேற்ற பயிற்சி' திட்டத்தின் கீழ், விண்ணப்பித்து 'கடல்சார் உயிரியல்' படிப்பில் M.Phil. முடித்தார்.

1979ல், டாக்டர். இஸ்மாயில் அவர்களுக்கு முனைவர் பட்டம் படிக்க விருப்பம். ஆனால், அவர் வேலை செய்தத் துறையின் தலைவர் அவருக்கு ஆதரவு தரவில்லை. அவரின் M.Phil. வழிக்காட்டியை அணுகிய போது அவர், இஸ்மாயில் அவர்கள் முழு நேர அறிஞராக வருவதாக இருந்தால், சிபாரிசு செய்வதாகக் கூறினார். ஆனல் டாக்டர். இஸ்மாயிலின் சம்பளத்தில் தான் குடும்பம் நடத்தப்பட்டதால், அவரால் முழு நேர முனைவர் பட்டத்துக்கு ஒப்பு கொள்ள இயலவில்லை. எனவே, மீண்டும் நியூ கல்லூரிக்கு சென்று அங்கு தன் பேராசிரியரின் மாணவர்களுக்கு வழிக்காட்டியாக இருந்து உதவினார்.

அவர் வழிக்காட்டிய மாணவர்களுள் ஒருவர் அவரின் ஆராய்ச்சிக்கு உதவும்படி டாக்டர். இஸ்மாயிலை வேண்டினார். 1980, ஜனவரியில் நடக்கவிருக்கும் தேசிய கருத்தரங்கில் கலந்து கொள்ள Ethological Society of India விடமிருந்து வந்த அழைப்பை பல்கலைக்கழகத்தில் எங்கோ சமீபத்தில் பார்த்தது ஞாபகம் வந்தது. அப்போது அதற்கு அவர் பெரியதாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இப்போது அந்த மாணவர் தன் ஆராய்ச்சிக்கு எந்த துறை என்று யோசிப்பதை பார்த்து, இந்த Ethological Society யின் கருத்தரங்க அழைப்பைப் பற்றி சொன்னார்.

Ethology என்பது உயிருடன் இருக்கும் விலங்குகள் பற்றிய ஆராய்ச்சி ஆகும். அப்போது, அந்த வழியே சென்ற ஆய்வக உதவியாளரிடம் ஆய்வகத்தில் உயிருடன் என்ன விலங்கினங்கள் உள்ளன என்று கேட்க, அந்த உதவியாளர் 'மண்புழு' என்று சொன்னார். இது 'தற்செயலாக நடந்த இனிய நிகழ்வு!!!'

தமிழ் நாட்டில் மண்புழு ஆராய்ச்சியில் டாக்டர். இஸ்மாயில் முன்னோடியாக திகழ்ந்தார். அவர்களின் முதல் ஆராய்ச்சி Ethological Society க்கு ஜனவரி 1980ல் விளக்கப்பட்டது. அடுத்த ஆராய்ச்சி Indian Society for Soil Biology



Ecology க்கு 1981ல் விளக்கப்பட்டது. சென்னை கிறிஸ்துவக் கல்லூரியின் பேராசிரியர் G.J. Fanwell இவரின் இந்த இரண்டு விளக்கவுரைகளையும் கேட்க நேரிட்டது. G.J.Fanwell அவர்கள், டாக்டர். இஸ்மாயிலிடம் முனைவர் பட்டம் இருந்தால் தான் அவருக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும் என்று கூறினார். அது மட்டுமன்றி டாக்டர். இஸ்மாயிலுக்கு ஆட்சேபணை இல்லையெனில் தன்னிடம் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் சொன்னார். 'தற்செயலாக நடந்த இனிய நிகழ்வு!!!' அடுத்த நாளே, சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்திட்டு டாக்டர். இஸ்மாயிலை சேர்த்தும் விட்டார். துரதிர்ஷ்டவசமாக 1982ல் அவர் மறைந்து விட, லயோலா கல்லூரியின் பேராசிரியர் திரு. மூர்த்தி அவர்களின் கீழ் டாக்டர். இஸ்மாயில் மாற்றப்பட்டார். அந்த மூன்றாவது வருடம் அவர் ஆராச்சியை சமர்ப்பிக்க, முனைவர் பட்டம் பெற்றார்.

அதற்கு பின் டாக்டர். இஸ்மாயில், இன்னும் நிறைய அவரின் ஆராய்ச்சிகளை சமர்ப்பித்தார். அவருக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது. Tata Institute of Fundamental Research மற்றும் பல அரசு நிறுவனங்களுக்கு வேலை செய்து, 1983ல், லன்காஸ்டர் பல்கலைக்கழகத்தில் பிந்தைய முனைவர் பட்டம் பெற்றார். இதோடு அவர் நிற்கவில்லை. அடுத்து அறிவியலில் முனைவர் பட்டம் பெற வேண்டி, அறிவியலில் முனைவர் பட்டம் பெற்ற சென்னை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு.T. சுப்பிரமணியம் அவர்களிடம் சேர்ந்து, அவரின் வழிக்காட்டுதலில் முதல் முயற்சியிலேயே 2001ல், அறிவியலில் முனைவர் பட்டமும் பெற்றார்.

மண்புழுக்கள் உரமாக்கல் பற்றிய தரப்படுத்தப்பட்ட செயல்முறைகள் ஏதும் எவரும் விளக்காத கட்டத்தில், டாக்டர். இஸ்மாயில் பூமியில் உள்ள மண்ணின் அடுக்குகளைப் ஆராய்ந்து, ஒரு செயல்முறை உருவாக்கி அதன் மாதிரியை அப்படியே ஒரு கூடையில் கொண்டு வந்தார். ஆரம்பத்தில், மண்புழுக்கள் எண்ணிக்கையில் பெருகியது. ஆனால், சிறிது நேரத்தில் புழுக்கள் அழுகி, இறந்து மண்ணை அசுத்தமாக்கியது. உடனே கூடையின் அடியில் சிறு ஓட்டைகள் போட்டு அதிகமாக இருந்த நீரை வெளியில் விட்டார். வெற்றி கண்டார்! இந்த செயல்முறையை விளக்கி அதற்கு 1991ல் காப்புரிமை வாங்கினார். பேராசிரியர் திரு. அனந்தகிருஷ்ணன் அவரின் அந்த செயல்பாட்டை வெளியிட சொன்னதால்,



1992 அக்டோபர் மாதம் 'தி ஹிந்து' பத்திரிகையில் வெளியிட்டார். அதே வருடம் நவம்பர் மாதத்தில் தமிழ் பத்திரிகையான 'பண்ணை செய்தி மலர்' மற்றும் இந்தியாவில் உள்ள எல்லா வட்டார மொழிகளிலும் அது வெளி வந்தது. அந்த காலத்தில் மண்புழுக்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு 4 மையங்களே இருந்தன. Zoological Survey of India, சம்பல்பூர் பல்கலைக்கழகம், பெங்களூரு பல்கலைக்கழகம் மற்றும் அவர் ஆய்வகம் ஆகும். அவரின் ஆய்வகம் மட்டுமே பொது மக்களின் உபயோகத்துக்கு செயல்முறையை வெளியிட்டது. இதன் மூலம் மண்புழு உரமாக்கல் பற்றிய விழிப்புணர்வு பரவியது.

நிறைய துண்டு பிரசுரங்கள், கையேடுகள் மூலம் வழிமுறைகளை விளம்பரப்படுத்தினார். அவர் விடுத்த ஒரே கோரிக்கை கையேடுகளில் உள்ள ஒரு ரூபாய் தபால் தலையை திருப்பி அனுப்ப வேண்டும் என்பது தான். கடலூர் சிறையில் இருந்த ஒரு கைதி மட்டும் 5 தபால் தலைகளை அனுப்பினார். சிறிது சிறிதாக ஒலிஒளி நாடவின் மூலமும் விழிப்புணர்வைப் பரப்பினார். ஒலிஒளி நாடவை அறிமுகம் செய்த கொஞ்ச நாட்களிலேயே MS Swaminathan Research Foundationல் நடந்த கருத்தரங்கில் கரிம வேளாண்மை பற்றி பேசினார். அங்கு இருந்த டாக்டர். அப்துல் கலாம் அவர்களுக்கு, டாக்டர். இஸ்மாயில் ஒரு ஒலிஒளி நாடா தந்தார். ஒரு மாதத்திற்குள் இந்தியாவின் ஜனாதிபதிக்கு முதன்மை அறிவுரையாளராக இருந்த டாக்டர். அப்துல் கலாம் அவர்களிடம் இருந்து டாக்டர். இஸ்மாயிலுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தில் அவர் கொடுத்த ஒலிஒளி நாடாவை பல பதிவுகள் எடுத்து அனைத்து வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கும் அனுப்பபட்டுள்ளது என்று எழுதியிருந்தது.

உரமாக்கலின் அடிப்படைத் தன்மையாக அவர் சொல்வது, கரிமப்பொருளை அழுக விடாமல் மக்க வைக்க வேண்டும் என்பதே. அதை மக்க வைக்க - நீரில் கலந்த பசுக் கழிவுகள் அல்லது புளித்த தயிர் அல்லது வெல்லத்தையும் பழுத்த பழத்தையும் சம அளவில் கலந்த கலவை - இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் அடைத்து இரு மடங்கு தண்ணீர் ஊற்றி அதை புளிக்க வைக்க வேண்டும். 15 - 20 நாட்களில் மது வாடை வரும். இதை இப்போது உபயோகப்படுத்தலாம். உரமாக்கலுக்கு எந்த விதமான கலமும் உபயோகப்படுத்தலாம். பெரியதான கலம் என்றால் உரமாக்கலுக்கும் நீண்ட நாட்கள் ஆகும். ஆனால், உரமாக்கல் 24 மணி நேரத்தில் முடியாது. கரிமப் பொருள் முதலில் மக்கி, பின் புளித்து







அதற்கு பிறகு தான் அது உரமாகும். அரசாங்கம் மக்களை மக்கும் பொருள், மக்காத பொருள் என பிரித்து வைக்கும்படி வலியுறுத்த வேண்டும். அனைவரும் உரம் தயாரிக்கலாம். மக்கும் கழிவுகள் எந்த வீட்டை விட்டும் வெளி வரக்கூடாது, விவசாயிகள், சுய உதவி குழுக்கள் பெண்கள், வீடுகள் இன்னும் நிறைய பேர் உரமாக்கல் செய்கின்றனர் என்று சொல்கிறார். குஜராத்தில் அவரின் மாணவர்கள் சென்னையில் டாக்டர். இஸ்மாயிலிடம் கற்று கொண்டதாக சொல்லி உரம் உற்பத்தி செய்கின்றனர்.

டாக்டர். இஸ்மாயில் பல பல விருதுகள் வாங்கியுள்ளார். இந்த மண்புழு உரமாக்கலில் அவர் தான் முன்னோடியாக கருதப்படுகிறார். மிகவும் தன்னடக்கமான அவர், தனக்கு கிடைத்த மிகப் பெரிய விருதாக கருதுவது - பெல்காம் அருகே சங்கிலி என்ற ஊரில் ஒரு வயதானவர் டாக்டர். இஸ்மாயில் விவசாயிகளுக்கு கொடுத்த பேச்சில் மெச்சி அவரிடம் இருந்த இரண்டு சக்கரங்களில் ஒன்றை அவருக்கு கொடுத்தது ஆகும். அரசாங்கம் அவரைப் பற்றியும் அவரின் ஆராய்ச்சியான மண்புழு உரமாக்கல் பற்றியும் பாட புத்தகங்களில் சேர்த்தது. பாடதிட்ட குழுவிலும் அவர் ஒருவராக இருந்தார். அரசாங்கத்தின் திருத்தப்பட்ட சமச்சீர் புத்தகங்கள் தான் அரசாங்க புத்தகங்களி லேயே சிறந்த புத்தகங்கள் என்று சொல்கிறார். நம் நட்டுக்கு மண்புழு உரமாக்கல் பற்றிய விழிப்புணர்வைத் தூண்டி விட்ட டாக்டர். இஸ்மாயில் நிச்சயம் சென்னையின் சாம்பியன் தான்.

சுபாஷிணி கோமேஸ்வரன்

